©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 3.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 50A] CHENNAI, WEDNESDAY, DECEMBER 22, 2010
Margazhi 7, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**(Supplement)**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI

**Notification No. TNERC/RPO/ 19/1, dated 07-12-2010**

*[Lr. No. TNERC.AD(L).F Notification/D1457/2010.]*

No. VI(2)/577/2010.

In exercise of powers conferred by Section 181 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) read with Sections 61, 66 and 86(1)(e) and all other powers enabling it in this behalf, and after previous publication, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following regulations for the Renewable Energy Purchase Obligation:

**1. Short title and commencement.—**

(1) These regulations may be called the Tamil Nadu Electricity Regulatory Commission (Renewable Energy Purchase Obligation) Regulations, 2010.

(2) These regulations shall come into force on the date of their publication in the *Tamil Nadu Government Gazette.*

**2. Definitions.—**

(1) In these regulations, unless the context otherwise requires,-

(*a*) **'Act'** means the Electricity Act, 2003 (Act 36 of 2003);

(*b*) **'Central Agency'** means the agency as defined in the Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable Energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010;

(*c*) **'Central Commission'** means the Central Electricity Regulatory Commission as defined in Section 2(9) of the Act;

(*d*) **'Certificate'** means the Renewable Energy Certificate (REC) issued by the Central Agency in accordance with the procedures prescribed by it and under the provisions specified in the Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable Energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010;

(*e*) **'Commission'** means the Tamil Nadu Electricity Regulatory Commission;

(*f*) **'forbearance price'** means the ceiling price as determined by the Central Commission in accordance with the Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010, as amended from time to time, within which only the Certificate can be dealt with in power exchange;

(*g*) **'obligated entity'** means the entity mandated under clause (e) of sub-section (1) of Section 86 of the Act to fulfil the renewable purchase obligation;

(*h*) **'Pooled cost of power purchase'** means the weighted average pooled price at which the distribution licensee has purchased the electricity including cost of self generation in the previous year from all the long-term energy suppliers, but excluding those based on liquid fuel, purchase from traders, short-term purchases and renewable energy sources;

(*i*) **'Power Exchange'** means that power exchange which operates with the approval of the Central Commission;

(*j*) **'preferential tariff'** means the tariff fixed by the Commission for sale of energy from a generating station based on renewable energy sources to a distribution licensee;

(*k*) **'Quantum of purchase'** means percentage share of total purchase of electricity from renewable sources as specified in the Commission's tariff orders on renewable energy and the quantum would be the sum of all direct purchases from generating stations based on renewable sources and purchase from any other source, which would arise from renewable sources;

(*l*) **'Renewable Sources'** means sources of energy as defined in the Regulation 2(1) (g) of the Power Procurement from New and Renewable Sources of Energy Regulations, 2008 issued by the Commission;

(*m*) **'State Agency'** means the **State Load Dispatch Centre** of the State of Tamil Nadu as defined under Section 2(66) of the Act or the Agency so designated by the Commission under Regulation 5(4) of these Regulations;

(*n*) **'Year'** means a financial year commencing with the 1st April of the current year and ending with the 31st March of the succeeding year;

(2) Words and expressions used and not defined in these Regulations but defined in the Act or the Regulations issued by the Central Commission or any other Regulations issued by the Commission, shall have the meaning respectively assigned to them in the Act or such Regulations.

**3. Renewable Purchase Obligation.-**

(1) Every obligated entity shall purchase not less than defined minimum percentage of its consumption of energy from renewable energy sources under the Renewable Purchase Obligation (RPO) during a year **as specified in the Commission's tariff regulations/orders on renewable energy issued from time to time:**

Provided that certain percentage out of the renewable purchase obligation so specified in the Commission's tariff order on solar energy shall be procured from generation based on solar energy as renewable energy source:

Provided further that when NTPC Vidyut Vyapar Nigam Ltd. (NVVN) supplies bundled power to distribution licensee(s) in the State at the rate determined as per Central Electricity Regulatory Commission regulations, the distribution licensee will be entitled to use the solar part of the bundled power for meeting the RPO specified under the Electricity Act, 2003.

Provided also that if the obligated entity has established the fact that the minimum quantum of power purchase from solar energy is not available in the market either in the form of solar Renewable Energy Certificate (REC) or solar energy in a particular year and the Commission is satisfied with the fact, then in such cases, the other renewable energy sources shall be purchased for fulfillment of the solar RPO **as mentioned in the Commission's tariff orders on renewable energy:**

Provided also that such obligation to purchase renewable energy shall be inclusive of the purchases, if any, from renewable energy sources already being made by concerned obligated entity:

Provided also that the energy purchase agreements for the purchase of renewable energy sources already entered into by the distribution licensees shall continue to be made till their present validity, even if the total purchases under such agreements exceed the percentage as specified hereinabove.

(2) If the RPO for any of the year is not specified by the Commission, the RPO specified for the previous year shall be continued beyond the period till any revision is effected by the Commission in this regard.

**4. Certificates under the Regulations of the Central Commission.-**

(1) Subject to these regulations the Certificates issued under the Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable Energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010 shall be the valid instruments for the discharge of the mandatory obligations set out in these regulations for the obligated entities to purchase electricity from renewable energy sources:

Provided that if a separate quota is earmarked for solar energy, the obligation to purchase electricity from generation based on solar as renewable energy source shall be fulfilled by purchase of solar certificates only.

(2) Subject to such direction as the Commission may give from time to time, the obligated entity shall act in consonance with the Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable Energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010 notified by the Central Commission in regard to the procurement of the certificates for fulfillment of the RPO under these regulations.

(3) The Certificates purchased by the obligated entities from the power exchange in terms of the regulation of the Central Commission mentioned in clause (1) of this Regulation shall be deposited by the obligated entities with the State Agency in accordance with the detailed procedure issued by the Central Agency.

**5. State Agency.-**

(1) The State Agency shall be the agency for accreditation and recommending the renewable energy projects for registration and to discharge the functions under these regulations and Central Electricity Regulatory Commission (Terms and Conditions for recognition and issuance of Renewable Energy Certificate for Renewable Energy Generation) Regulations, 2010.

(2) The State Agency shall submit quarterly status report to the Commission in respect of compliance of renewable purchase obligation by the obligated entities and may suggest appropriate action to the Commission if required for compliance of the renewable purchase obligation.

(3) The Commission may from time to time fix the remuneration and charges payable to the State Agency for discharge of its functions under these regulations.

(4) If the Commission is satisfied that the State Agency is not able to discharge its functions satisfactorily, it may by general or special order, and for reasons to be recorded in writing, designate any other agency to function as State Agency as it considers appropriate.

**6. Eligibility and Registration for Certificates.–**

(1) A generating company engaged in generation of electricity from renewable energy sources shall be eligible for obtaining accreditation form the State Agency if it fulfils the following conditions:

(*a*) It does not have any power purchase agreement for the capacity related to such generation to sell electricity at a preferential tariff determined by the Commission; and

(*b*) It sells the electricity generated either (i) to the distribution licensee in the State of Tamil Nadu at a price not exceeding the pooled cost of power purchase, or (ii) to any other licensee or to an open access consumer at a mutually agreed price, or through power exchange at market determined price.

**7. Consequence of default.-**

(1) If the obligated entity does not fulfill the RPO as provided in these regulations during any year or does not purchase the certificates as the case may be, the Commission may direct the obligated entity to deposit into a separate fund, to be created and maintained by the **State Agency**, such amount as the Commission may determine on the basis of the shortfall in units of RPO and the forbearance price decided by the Central Commission. The penal charges will be equivalent to the forbearance price multiplied by shortfall in units of RPO:

Provided that the fund so created shall be utilized, as may be directed by the Commission, for purchase of the certificates:

Provided further that the Commission may empower an officer of the State Agency to procure from the Power Exchange the required number of certificates to the extent of the shortfall in the fulfillment of the obligations, out of the fund:

Provided also that the distribution licensee shall be in breach of his licence condition if he fails to deposit the amount as directed by the Commission within 15 days of the communication of the direction.

(2) Where any obligated entity fails to comply with the obligation to purchase the required percentage of power from renewable energy sources or to purchase the renewable energy certificates, it shall also be liable for penalty as may be decided by the Commission under section 142 of the Act:

Provided that in case of bonafide difficulty in complying with the renewable purchase obligation owing to non-availability of certificates, the obligated entity can approach the Commission requesting permission to carry forward of compliance requirement to the next year.

**8. Power to remove difficulties.-**

(1) The Commission shall suo-motu or on an application from any person generating electricity from renewable sources or an entity mandated under clause (e) of sub-section (1) of section 86 of the Act to fulfil the renewable purchase obligation may review, add, amend or alter these regulations and pass appropriate orders to remove any difficulty in exercising the provisions of these regulations.

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

R.V. RAJAH,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
14th December 2010.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

*[அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./புகொக (RPO) /19 /1, 07–12–2010 நாளிட்டது]*

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்கள், பிரிவுகள் 61, 66 மற்றும் 86(1)(e) பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் போது வரும் அதிகாரத்திலிருந்தும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, மற்றும் முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக பின்வரும் ஒழுங்குமுறை விதிகளைச் செய்கிறது :

**1. குறுந்தலைப்பும் மற்றும் தொடக்கமும்.–**

(1) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(2) இந்த ஒழுங்குமுறை விதிகள், அவை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. பொருள்வரையறைகள்.–**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகளில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(*a*) 'சட்டம்' என்பது, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் (சட்ட எண் 36/2003) என்று பொருள்படும்;

(*b*) 'மத்திய முகமை' என்பது, 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதியில் குறிக்கப்படலாகும் முகமை என்று பொருள்படும் ;

(*c*) 'மத்திய ஆணையம்' என்பது, மின்சாரச் சட்டத்தின் 2(9)ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும்;

(*d*) 'சான்றிதழ்' என்பது, மத்திய முகமையினால் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கிணங்கி அதனால் வழங்கப்பட்ட மற்றும் 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுக்கப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் அதனை வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும் ;

(*e*) 'ஆணையம்' என்பது, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும்;

(*f*) 'பொறுத்துக்கொள்ளக்கூடிய விலை' என்பது, அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டவாறான 2010ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுக்கப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் அதனை வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்க மத்திய ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் உச்சவிலை என்று பொருள்படும். மேற்சொன்ன விலைக்கு உட்பட்டு மட்டுமே மின் பரிமாற்ற களத்தில் சான்றிதழை வர்த்தகம் செய்யமுடியும்;

(*g*) 'கடப்பாடுடைய நிறுவனம்' என்பது, புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டாணை நிறைவேற்றுவதற்கு சட்டத்தின் 86ம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் (e) கூறின்படி கட்டளையிடப்பட்ட நிறுவனம் என்று பொருள்படும்;

(*h*) ‘ஒருங்கிணைந்த மின்கொள்முதல் விலை’ என்பது நீண்டகால மின் வழங்குபவர்கள் அனைவரிடமிருந்தும் முந்திய ஆண்டில் சுய மின் உற்பத்தி செலவு உள்ளடங்கலாக, ஆனால், நீர்ம எரிபொருள், வணிகர்களிடமிருந்து கொள்முதல், குறுகிய கால கொள்முதல்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான கொள்முதல் நீங்கலாக மின் பகிர்மான உரிமம்தாரர் மின் கொள்முதல் செய்துள்ள கூட்டு சராசரி விலை என்று பொருள்படும்;

(*i*) ‘மின் பரிமாற்ற களம்’ என்பது, மத்திய ஆணையத்தின் ஒப்புதலளிப்புடன் செயற்படும் மின் பரிமாற்ற களம் என்று பொருள்படும்;

(*j*) ‘சலுகை மின்கட்டணம்’ என்பது, மின்பகிர்மான உரிமம்தாரருக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் அடிப்படையில் மின்உற்பத்தி நிலையத்திலிருந்து செய்யப்படும் மின்சார விற்பனைக்காக ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் மின் கட்டணம் என்று பொருள்படும்;

(*k*) ‘கொள்முதல் அளவு’ என்பது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான ஆணையத்தின் மின்கட்டண ஆணைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் மொத்தக் கொள்முதலின் விழுக்காட்டு அளவு என்று பொருள்படும் மற்றும் அந்த அளவு புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களின் அடிப்படையில் மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து செய்யப்படும் நேரடிக் கொள்முதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து எழக்கூடிய பிற ஆதாரங்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதலின் தொகையாக இருக்கும்;

(*l*) ‘புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள்’ என்பது, ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட, **2008**ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் மின் கொள்முதல் ஒழுங்குமுறை விதிகளின் **2(1)**(g) ஒழுங்குமுறைவிதியில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஆதாரங்கள் என்று பொருள்படும்;

(*m*) ‘மாநில முகமை’ என்பது, மின்சாரச் சட்டத்தின் **2(66)**ஆம் பிரிவின்படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறான தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம் அல்லது இந்த ஒழுங்குமுறை விதிகளின் **5(5)** ஒழுங்குமுறை விதிப்படி ஆணையத்தால் சுட்டியமர்த்தப்பட்ட முகமை என்று பொருள்படும்;

(*n*) ‘ஆண்டு’ என்பது, நிதியாண்டு என்று பொருள்படும், அதாவது நடப்பாண்டின் ஏப்ரல் **1**இல் இருந்து அடுத்த ஆண்டின் மார்ச் **31** வரையிலான கால அளவைக் கொண்டதாகும்.

**(2)** இந்த ஒழுங்குமுறை விதிகளில் பயன்படுத்தப்படும் மற்றும் அதில் பொருள்வரையறை செய்யப்படாத ஆனால், மேற்சொன்ன சட்டத்தில் அல்லது மத்திய ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிற ஒழுங்குமுறை விதிகள் எதிலும் பொருள்வரையறை செய்யப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும், மேற்சொன்ன சட்டத்தில் அல்லது மத்திய ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட அத்தகைய ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட அத்தகைய பிற ஒழுங்குமுறை விதிகளில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருள்களை உடையனவாகும்.

### 3. புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு :

**(1)** கடப்பாடுடைய நிறுவனம் ஒவ்வொன்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான ஆணையத்தின் மின்கட்டண ஆணைகளில் / ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு ஓர் ஆண்டின் போது புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின்படி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து தன்னுடைய மின் நுகர்வில் குறைந்தபட்ச விழுக்காட்டை கொள்முதல் செய்தல் வேண்டும்:

ஆனால், சூரியசக்தி மீதான ஆணையத்தின் மின்கட்டண ஆணையில் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிலிருந்து குறிப்பிட்ட விழுக்காட்டு அளவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமான சூரியசக்தி அடிப்படையிலான மின்உற்பத்தியிலிருந்து கொள்முதல் செய்யப்படுதல் வேண்டும்:

ஆனால் மேலும், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளின் படி நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் மாநிலத்தில் உள்ள மின்பகிர்மான உரிமம் தாரர்களுக்கு கலவை மின்சக்தியை (bundled Power) என்.வி.வி.என் (NVVN – NTPC Vidyut Vyapar Nigam Ltd.) நிறுவனம் வழங்குகிற போது, **2003** ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் படி குறித்துறைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக கலவை மின்சக்தியின் சூரிய சக்தியின் பகுதியை பண்படுத்துவதற்கு மின்பகிர்மான உரிமம்தாரர் உரிமை உடையவர் ஆவார்.

ஆனால் மேலும், கடப்பாடுடைய நிறுவனம், சூரியசக்தியிலிருந்து செய்யப்படும் மின் கொள்முதலின் குறைந்தபட்ச அளவு, சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழ் (REC) அல்லது குறிப்பிட்ட ஆண்டிற்கான சூரிய சக்தி வடிவில் சந்தையில் கிடைக்கக்கூடியதாக இல்லை என்ற உண்மையை உறுதிப்படுத்துமானால், மற்றும் ஆணையம் இந்த உண்மை பற்றி திருப்தி கொள்ளுமானால் அத்தகைய நேர்வுகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மீதான ஆணையத்தின் மின்கட்டண ஆணைகளில் குறிப்பிடப்பட்டவாறு, சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க மின் கொள்முதல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக பிற எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுதல் வேண்டும்.

மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைக் கொள்முதல் செய்வதற்கான அத்தகைய கடப்பாடு, சம்பந்தப்பட்ட கடப்பாடுடைய நிறுவனத்தினால் ஏற்கெனவே செய்யப்பட்டிருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல்கள், எவையேனுமிருப்பின், அவற்றை உள்ளடக்கும்;

ஆனால் மேலும், மின் பகிர்வு உரிமம்தாரர்களால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்காக ஏற்கெனவே எழுதிக் கொடுக்கப்பட்ட மின்கொள்முதல் உடன்பாடுகளின்படியான மின் கொள்முதல்கள், அத்தகைய உடன்பாடுகளின்படியான மொத்தக் கொள்முதல்கள், இதில் மேலே குறித்துரைக்கப்பட்டவாறான விழுக்காட்டு அளவிற்கு மிகைப்படுமானால், அதனுடைய செல்லும் தன்மை வரையில் தொடர்ந்து செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணையத்தினால் ஏதாவது ஒரு ஆண்டில் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு குறித்துரைக்கப்படவில்லை எனில், இது குறித்து ஆணையத்தினால் மாற்றியமைத்தல் எதுவும் செயற்படுத்தப்படும் வரையிலான கால அளவிற்கு அப்பால், முந்திய நிதியாண்டிற்காக குறித்துரைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாடு, தொடருதல் வேண்டும்.

**4. மத்திய ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளின்படியான சான்றிதழ்கள் :**

(1) இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு, 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளின்படி வழங்கப்பட்ட சான்றிதழ்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு கடப்பாடுடைய நிறுவனங்களுக்காக, இந்த ஒழுங்குமுறை விதிகளில் விவரிக்கப்பட்டுள்ள கட்டாயக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செல்லத்தக்க முறையாவணமாகும்.

ஆனால், கடப்பாடுடைய நிறுவனம் கொள்முதல் சான்றிதழ்களின் மூலம் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டை நிறைவேற்றும் போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமான சூரியசக்தி அடிப்படையிலான மின் உற்பத்தியிலிருந்து செய்யப்படும் மின் கொள்முதல், சூரியசக்தி சான்றிதழ்கள் மூலம் மட்டுமே நிறைவேற்றப்படும்.

(2) கடப்பாடுடைய நிறுவனம், அவ்வப்போது, ஆணையம் பிறப்பிக்கலாகும் உத்தரவுக்கு உட்பட்டு, இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கான சான்றிதழ்களை கொள்முதல் செய்வது குறித்து மத்திய ஆணையத்தினால் அறிவிக்கை செய்யப்பட்ட 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் ஒழுங்குமுறை விதிகளுக்கு இசைவாகச் செயற்படுதல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குமுறை விதியின் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட மத்திய ஆணையத்தின் ஒழுங்குமுறை விதியின்படி மின் பரிமாற்ற களத்திலிருந்து கடப்பாடுடைய நிறுவனங்களால் வாங்கப்பட்ட சான்றிதழ்கள் மத்திய முகமையினால் பிறப்பிக்கப்பட்ட விரிவான நடைமுறைக்கிணங்க மாநில முகமையிடம் கடப்பாடுடைய நிறுவனங்களால் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**5. மாநில முகமை :**

(1) மாநில முகமை இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கும் மற்றும் 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சான்றிதழை அங்கீகரிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்குமான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுக்கும் இணங்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை பதிவு செய்வதற்கும் மற்றும் அதன் செயற்பணிகளை மேற்கொள்வதற்குமாக அதனை அங்கீகரிப்பதற்கும் மற்றும் பரிந்துரை செய்வதற்குமான முகமையாக செயற்படுதல் வேண்டும்.

(2) மாநில முகமை, கடப்பாடுடைய நிறுவனங்களின் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கி நடத்தலை ஆணையத்திற்கு காலாண்டு நிலை குறித்த அறிக்கையை அனுப்புதல் வேண்டும் மற்றும் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கி நடப்பதற்கான தேவை ஏற்படுமானால், ஆணையத்திற்கு உரிய நடவடிக்கை பற்றி குறிப்பாகத் தெரிவிக்கலாம்.

(3) ஆணையம், மாநில முகமைக்கு இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி தன்னுடைய செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக அதற்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியம் மற்றும் கட்டணங்களை அவ்வப்போது நிர்ணயிக்கலாம்.

(4) ஆணையம், மாநில முகமை, தன்னுடைய செயற்பணிகளை நிறைவேற்ற முடியாதிருக்கிறது என்று தெளிவுறக் காணுமாயின், அது, பொது அல்லது சிறப்பு ஆணை மூலம் மற்றும் எழுத்து வடிவிலான காரணங்களைப் பதிவு செய்வதன் மூலம் பொருத்தமெனக் கருதும் பிற முகமை எதனையும் மாநில முகமையாக செயற்படுவதற்கு சுட்டியமர்த்தலாம்.

**6. சான்றிதழ்களுக்கான தகுதி மற்றும் பதிவு :**

(1) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள மின் உற்பத்தி நிறுமம், பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுமானால், மாநில முகமையிடமிருந்து பதிவினை பெறுவதற்கு தகுதியுடையதாகும் **:**

(*a*) அது, ஆணையத்தின் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமையுடைய மின்கட்டணத்தில் மின்சாரத்தை விற்பதற்கு, அத்தகைய மின் உற்பத்தி தொடர்பான திறனுக்கான, மின் கொள்முதல் உடன்பாடு எதனையும் கொண்டிருக்கலாகாது ; மற்றும்

(*b*) அது உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை ஒன்று (i) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மின்பகிர்மான உரிமம்தாரருக்கு ஒருங்கிணைந்த மின்கொள்முதல் விலைக்கு மிகாமல் விற்றல் அல்லது, (ii) பரஸ்பரம் ஒத்துக்கொண்ட விலையில் பிற உரிமம்தாரர் எவருக்கும் அல்லது திறந்த நுழைவுரிமை நுகர்வோருக்கு விற்றல் அல்லது சந்தை நிர்ணயித்த விலையில் மின்பரிமாற்ற களம் மூலமாக விற்றல்.

**7. தவறுகையின் விளைவு :**

(1) கடப்பாடுடைய நிறுவனங்கள், ஏதேனும் ஆண்டின் போது இந்த ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்பட்டவாறு, புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டினை நிறைவேற்றாதிருந்து, சான்றிதழ்களை கொள்முதல் செய்யாதிருக்குமானால், ஆணையம், புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின் யூனிட்டுகளிலுள்ள பற்றாக்குறையின் மற்றும் மத்திய ஆணையத்தினால் முடிவு செய்யப்படும் பொறுத்துக் கொள்ளக்கூடிய விலையின் அடிப்படையின் பேரில் ஆணையம் நிர்ணயிக்கலாகும் தொகையினை, **மாநில முகமையினால்**

உருவாக்கப்பட்டு மற்றும் பேணி வரப்படும் தனிப்பட்ட நிதியத்தில் வைப்பீடு செய்யுமாறு அத்தகைய கடப்பாடுடைய நிறுவனத்திற்கு உத்தரவிடலாம். புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டின் குறைவாக உள்ள யூனிட்டுகளின் பொருத்துக்கொள்ளக்கூடிய விலைக்கு சமமாக தண்டக் கட்டணங்கள் இருக்கும்.

ஆனால், அவ்வாறு உருவாக்கப்பட்ட நிதியம் சான்றிதழ்களை வாங்குவதற்காக ஆணையத்தினால் உத்தரவிடப்படலாகும் முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் :

ஆனால் மேலும், ஆணையம், அந்நிதியத்திலுள்ள தொகையிலிருந்து, கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலுள்ள பற்றாக்குறையின் அளவுக்கு தேவைப்படும் எண்ணிக்கையிலான சான்றிதழ்களை மின் பரிமாற்ற களத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு மாநில முகமையின் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம் :

ஆனால் மேலும், மின் பகிர்வு உரிமம்தாரர், ஆணையத்தினால் உத்தரவிடப்பட்ட தொகையை, உத்தரவு தெரிவிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் வைப்பீடு செய்யத்தவறுவாராயின், தம்முடைய உரிம நிபந்தனையை மீறியவராவார்.

(2) கடப்பாடுடைய நிறுவனம் எதுவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து தேவையான விழுக்காட்டளவு மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்குரிய கடப்பாட்டிற்கு இணங்கி நடக்கத் தவறுகிறவிடத்து, அது, மேற்சொன்ன சட்டத்தின் 142ஆம் பிரிவின்படி ஆணையத்தினால் முடிவு செய்யப்படலாகும் தண்டனைக்கும் உள்ளாதல் வேண்டும் :

ஆனால், சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என்றால், புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடப்பாட்டிற்கு இணங்கி நடப்பதில் உண்மையாகவே இடர்ப்பாடு ஏற்படும் நேர்வில், கடப்பாடுடைய நிறுவனம், தேவைப்படுகிற இணங்கி நடத்தலை அடுத்த ஆண்டிற்குக் கொண்டு போவதற்கு ஆணையத்தை அணுகலாம்.

**8. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அதிகாரம் :**

(1) ஆணையம், தானே முற்பட்டு அல்லது புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் எவரேனும் நபரின் அல்லது மின் பகிர்வு உரிமம்தாரரின் அல்லது சுய உபயோகிப்பாளர்களின் அல்லது திறந்த நுழைவுரிமை நுகர்வோரின் விண்ணப்பத்தின் பேரில் இந்த ஒழுங்குமுறை விதிகளை மறு ஆய்வு செய்யலாம், அவற்றில் சேர்க்கலாம், அதைத் திருத்தலாம் அல்லது அதை மாற்றலாம் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளை நிறைவேற்றுவதிலுள்ள இடர்ப்பாடு எதனையும் நீக்குவதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 008,
2010 டிசம்பர் 14.

**ரா. வெ. ராஜா,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU